©
தமிழ் நாடு அரசு
2012

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 5.60 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 31] சென்னை, புதன்கிழமை, ஆகஸ்ட் 8, 2012
ஆடி 24, திருவள்ளுவர் ஆண்டு – 2043

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

### தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

**அறிவிக்கை-I.**

*[அரசாணை (நிலை) எண் 30, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (M2)த் துறை, 22 பிப்ரவரி 2012.]*

1948ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்திய சட்டம் 63/1948) 112 ஆம் பிரிவிலும், 7AA பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1950 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் விதிகளில் செய்யக் கருதியுள்ள வரைவுத்திருத்தங்கள் இதனால் பாதிக்கக்கூடிய அனைவரின் தகவலுக்காக மேற்சொன்ன சட்டத்தின் 115ஆம் பிரிவில் சொல்லியுள்ளவாறு இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த வரைவுத் திருத்தங்கள், **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்படும் நாளிலிருந்து நாற்பத்தைந்து நாட்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர் இது தொடர்பாக எவரிடமிருந்தேனும் வரப்பெறும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை எவையேனும் இருப்பின், அவற்றை சென்னை—600 005—ல் உள்ள தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வாளர் மூலமாக அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை, தலைமைச் செயலகம், சென்னை—600 009 என்ற முகவரிக்கு இருபடிகளில் அனுப்பிவைக்க வேண்டும்.

### வரைவு திருத்தங்கள்

மேற்சொன்ன விதிகளில்:—

(i) 95ஆம் விதியின்கீழ் அட்டவணை—24இல், பத்தி 12—க்குப் பிறகு கீழ்க்கண்ட பத்தி சேர்க்கப்பட வேண்டும், அதாவது:—

*12-A. தனிநபர் விபத்துக் காப்பீடு*:—"தீப்பெட்டி அல்லது பட்டாசு தயாரிக்கும் தொழிற்சாலையின் ஒவ்வொரு உரிமையாளரும், அத்தகைய தொழிற்சாலையில் பணிபுரியும் பணியாளர்களின் காப்பீட்டுத் தொகை குறித்த விவரங்கள் அடங்கிய அறிக்கையை படிவம் எண் 41—இல் தயார் செய்து அதனை தொழிற்சாலை அமைந்ததுள்ள பகுதியின் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர் மூலமாக தலைமை ஆய்வாளருக்கு ஆறு மாதங்களுக்கு ஒரு முறை அனுப்ப வேண்டும்."

(2) படிவம் எண் 40—க்குப் பிறகு பின்வரும் படிவம் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் அதாவது:—

**"படிவம் எண் 41**

**(95ஆம் விதியின்கீழ் 12-A-பத்தியின்கீழ் வரையறுக்கப்பட்டது)**

**தனிநபர் விபத்துக் காப்பீடு அறிக்கை**

| *தொழிற் சாலையின் பெயர் மற்றும் முகவரி* | *பதிவு எண்* | *பணிபுரியும் பணியாளர்களின் உயரளவு எண்ணிக்கை காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் வருபவர்கள்* | *காப்பீட்டு நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி* | *காப்பீட்டு திட்டத்தின் தன்மை* | *செல்திறன் காலஅளவு ...லிருந்து* | *...வரை* | *செலுத்தப் பட்ட மொத்த பிரிமியம் தொகை.* |
|---|---|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* | *(7)* | |
| | | உரிய வயதடைந்த ஆண்<br>உரிய வயதடைந்த பெண்<br>வளரிளம் பருவ ஆண்<br>வளரினம் பருவ பெண் | | | | | |

மேலே நெடும்பத்தி **(3)**இல் குறிப்பிட்டுள்ள அனைத்துப் பணியாளர்களுக்கும் காப்பீட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது என்றும், அவை செயலில் உள்ளது என்றும் நான் இதனால் உறுதியளிக்கிறேன்.

நாள்:

இடம்: *உரிமையாளரின் கையொப்பம்.*

மேற்சொன்ன விவரங்கள் சரிப்பார்க்கப்பட்டு அவை சரி என்று கண்டறியப்பட்டுள்ளது.

*தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வாளர்.*

## அறிவிக்கை-II

*[அரசாணை (நிலை) எண் 30, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு ( M2)த் துறை, 22 பிப்ரவரி 2012.]*

**1948**ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்திய சட்டம் **63/1948**) **112** ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு **1950** ஆம் ஆண்டு தொழிற்சாலை விதிகளில் செய்யக் கருதியுள்ள வரைவுத்திருத்தம் இதனால் பாதிக்கப்படகூடிய அனைவரின் தகவலுக்காக மேற்சொன்ன சட்டத்தின் **115**ஆம் பிரிவில் சொல்லியுள்ளவாறு இதனால் வெளியிடப்படுகிறது.

**2.** இந்த வரைவுத் திருத்தம், **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்படும் நாளிலிருந்து நாற்பத்தைந்து நாள்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர் இது தொடர்பாக எவரிடமிருந்தேனும் வரப்பெறும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை எவையேனும் இருப்பின், அவற்றை சென்னை—**600 005**-ல் உள்ள தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வாளர் மூலமாக அரசு செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை, தலைமைச் செயலகம், சென்னை—**600 009** என்ற முகவரிக்கு இருபடிகளில் அனுப்பிவைக்க வேண்டும்.

## வரைவுத் திருத்தம்

மேற்சொன்ன விதிகளில் படிவம் எண் **25**—ல், நெடும்பத்தி **16**—க்குப் பதிலாக பின்வரும் நெடும்பத்தி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

| (16) | (15) |
|---|---|
| விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தின் விவரங்கள் ஏதேனும் இருப்பின் | குறிப்புரை |

**மோகன் பியாரே,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

## அறிவிக்கை

*[அரசாணை (நிலை) எண் 53, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (M2)த் துறை, 12 ஏப்ரல் 2012.]*

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) 112 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1950 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் விதிகளில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 115 ஆம் பிரிவின்கீழ் கோரியுள்ளவாறு முன்னரே வெளியிடப்பட்டுள்ளது.

## திருத்தங்கள்

மேற்சொன்ன விதிகளில்:—

(1) 4 ஆம் விதியில், ''விவர அட்டவணைக்கு'' பதிலாக பின்வரும் விவர அட்டவணை அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

### ''விவர அட்டவணை

| *நடமாடும் சாதனம் உட்பட நிறுவப்பட்ட சாதனத்தின் மொத்த பரித்திறன்* | அந்த ஆண்டில் ஏதேனுமொரு நாளில் பணியில் அமர்த்தப்படக்கூடிய அதிக அளவு நபர்களின் எண்ணிக்கை | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | 20 | 50 | 100 | 250 | 500 | 1,000 | 2,000 | 5,000 | 10,000 | 10,000—க்கு மேல் |
| | (செலுத்த வேண்டிய தொகை ரூபாயில்) | | | | | | | | | | |
| | *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* | *(7)* | *(8)* | *(9)* | *(10)* | *(11)* |
| பரித்திறனற்றது | 400 | 800 | 1,200 | 1,600 | 3,600 | 5,400 | 12,000 | 18,000 | 33,000 | 48,000 | 60,000 |
| 10 பரித்திறன் வரையில் | 800 | 1,200 | 1,600 | 2,400 | 5,400 | 9,000 | 24,000 | 36,000 | 54,000 | 72,000 | 90,000 |
| 10 பரித்திறனுக்கு மேல் 50 பரித்திறன் வரையில் | 1,200 | 1,600 | 2,400 | 3,600 | 9,000 | 14,400 | 36,000 | 54,000 | 72,000 | 90,000 | 1,08,000 |
| 50 பரித்திறனுக்கு மேல் 129 பரித்திறன் வரையில் | 1,600 | 2,400 | 3,600 | 6,000 | 14,400 | 24,000 | 54,000 | 72,000 | 90,000 | 1,08,000 | 1,20,000 |
| 129 பரித்திறனுக்கு மேல் 250 பரித்திறன் வரையில் | 2,400 | 3,600 | 6,000 | 9,600 | 24,000 | 36,000 | 72,000 | 90,000 | 1,08,000 | 1,20,000 | 1,32,000 |
| 250 பரித்திறனுக்கு மேல் 500 பரித்திறன் வரையில் | 3,600 | 6,000 | 8,000 | 12,800 | 36,000 | 48,000 | 90,000 | 1,08,000 | 1,20,000 | 1,32,000 | 1,44,000 |
| 500 பரித்திறனுக்கு மேல் 1,000 பரித்திறன் வரையில் | 6,000 | 6,400 | 12,800 | 24,000 | 48,000 | 60,000 | 1,08,000 | 1,20,000 | 1,32,000 | 1,44,000 | 1,56,000 |
| 1,000 பரித்திறனுக்கு மேல் 2,000 பரித்திறன் வரையில் | 6,400 | 12,800 | 24,000 | 32,000 | 60,000 | 72,000 | 1,20,000 | 1,32,000 | 1,44,000 | 1,56,000 | 1,68,000 |
| 2,000 பரித்திறனுக்கு மேல் 5,000 பரித்திறன் வரையில் | 12,800 | 24,000 | 32,000 | 40,000 | 72,000 | 84,000 | 1,32,000 | 1,44,000 | 1,56,000 | 1,68,000 | 1,80,000 |
| 5,000 பரித்திறனுக்கு மேல் 7,500 பரித்திறன் வரையில் | 24,000 | 32,000 | 40,000 | 48,000 | 84,000 | 96,000 | 1,44,000 | 1,56,000 | 1,68,000 | 1,80,000 | 1,92,000 |
| 7,500 பரித்திறனுக்கு மேல் 10,000 பரித்திறன் வரையில் | 32,000 | 40,000 | 48,000 | 56,000 | 96,000 | 1,08,000 | 1,56,000 | 1,68,000 | 1,80,000 | 1,92,000 | 2,04,000 |
| 10,000 பரித்திறனுக்கு மேல் | 40,000 | 48,000 | 56,000 | 64,000 | 1,08,000 | 1,20,000 | 1,68,000 | 1,80,000 | 1,92,000 | 2,04,000 | 2,16,000 |

(2) 56-B விதியில், துணைவிதி (2)—க்கு பதிலாக, பின்வரும் துணை விதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

''(2) அழுத்த தளவாடம் அல்லது கலம் அல்லது நீரால் காப்பிடப்பட்ட கேஸ் ஹோல்டர் (Gas holder) ஆய்வு மற்றும் சோதனைக்காக செலுத்த வேண்டிய கட்டணம் பின்வருமாறு இருக்க வேண்டும்:—

(i) வெளிப்புறச் சோதனைக்கு, அளவு அல்லது திறனைக் கருதிப் பாராமல் தளவாடம் அல்லது கலம் ஒன்றுக்கு ரூ. 400 (ரூபாய் நானூறு மட்டும்);

(ii) நிலை நீர்மம் சார்ந்த சோதனைக்கு தளவாடம் அல்லது கலம் ஒன்றுக்கு 4Kgf/sq.cm(g) வரையில் ரூபாய் 1,000 (ரூபாய் ஆயிரம் மட்டும்);

(iii) நிலை நீர்மம் சார்ந்த சோதனைக்கு தளவாடம் அல்லது கலம் ஒன்றுக்கு 4Kgf/sq.cm(g)-க்கு மேல் ரூபாய் 2,000 (ரூபாய் இரண்டு ஆயிரம் மட்டும்);

(iv) வெளிப்புறச் சோதனைக்கு, அளவு அல்லது திறனைக் கருதிப் பாராமல், தளவாடம் அல்லது கலம் ஒன்றுக்கு ரூபாய் 1,000 (ரூபாய் ஆயிரம் மட்டும்); மற்றும்

(v) பாதிப்பு ஏற்படுத்தாத ஒலியலை அதிர்வாய்வு முறையில் பருமனை அளவீடு செய்யும் சோதனைக்கு, அளவு அல்லது திறனைக் கருதிப் பாராமல், தளவாடம் அல்லது கலம் ஒன்றுக்கு ரூபாய் 4,000 (ரூபாய் நான்காயிரம் மட்டும்)'';

(3) விதி 67–Aஇல், பகுதி (iv)–இல், துணைப்பகுதி (a)–ல், ''ரூபாய் 50/– (ரூபாய் ஐம்பது மட்டும்)'' என்ற தொடருக்குப் பதிலாக'' ''ரூபாய் 100 (ரூபாய் நூறு மட்டும்)'' என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(4) விதி 86-A இல் துணைவிதி (b)–ல், ''ரூபாய் 50 (ரூபாய் ஐம்பது மட்டும்)'' என்ற தொடருக்கு பதிலாக, ''ரூபாய் 100 (ரூபாய் நூறு மட்டும்)'' என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்; மற்றும்

(5) விதி 95–ல் துணைவிதி (1-A)–இல், பகுதி (a)–ல் ''ரூபாய் 50 (ரூபாய் ஐம்பது மட்டும்)'' என்ற தொடருக்குப் பதிலாக, ''ரூபாய் 100 (ரூபாய் நூறு மட்டும்)'' என்ற தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**மோகன் பியாரே,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

## அறிவிக்கைகள்

*[அரசாணை (நிலை) எண் 13, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (M2) துறை, 13 ஜனவரி 2012.]*

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) 87 ஆம் பிரிவிலும், மேற்படி சட்டத்தின் 112 ஆம் பிரிவின்படியும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு 1950 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் விதிகளில் செய்யக் கருதிய பின்வரும் வரைவுத் திருத்தங்கள், மேற்சொன்ன சட்டத்தின் 115 ஆம் பிரிவில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த அறிவிக்கை, **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்படும் நாளிலிருந்து நாற்பத்தைந்து நாட்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர், வரைவுத் திருத்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், அது தொடர்பாக ஏதேனும் நபரிடமிருந்து வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரை அல்லது கருத்துரை, தமிழ்நாடு அரசால் பரிசீலிக்கப்படும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அவற்றை இரு படிகளில், சென்னை–600 005, சேப்பாக்கத்தில் உள்ள தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் மூலம் அரசு முதன்மைச் செயலர் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 0009 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

## திருத்தங்கள்

மேற்சொன்ன விதிகளில், 95 ஆம் விதியில், (i) துணைவிதி (1)–ல் 32 ஆம் இனத்திற்குப் பின்னர் பின்வரும் இனம் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது:—''32 வார்ப்படச் சாலைகள் மற்றும் எரியுலைகளில் செயற்பாடுகள்'' (2) விவர அட்டவனை XXXII-க்கு பதிலாக, பின்வரும் விவர அட்டவணை அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

### "விவர அட்டவணை XXXII

### வார்ப்படச்சாலைகள் மற்றும் எரியுலைகளில் செயற்பாடுகள்

1. **விண்ணப்பம்**:—பின்வரும் ஏதேனும் செயற்பாடுகள் அல்லது நடைமுறைகள் மேற்கொள்ளப்படுகிற தொழிற்சாலைகளின் அனைத்துப்பாகங்களுக்கும் இந்த விவர அட்டவணையின் விதித்துறைகள் பொருந்தும்:—

(*a*) இரும்பு வார்ப்படங்களின் உற்பத்தி அல்லது நேர்விற்கேற்ப, மணல், வண்டல் மண்ணால் செய்யப்பட்ட வார்ப்படங்களில் வார்ப்பதன் மூலம் உருக்கு வார்ப்படங்கள், வார்ப்படத் தொகுப்பு அல்லது பிற கலவைப் பொருட்கள் அல்லது கவச வார்ப்படம் அல்லது மைய விலக்கு விசை வார்ப்படம் மற்றும் அத்தகைய உற்பத்திக்கு இடைநிகழ்வான ஏனைய நடைமுறை;

(*b*) மணல், வண்டல் மண், உலோகம் வார்ப்படத் தொகுப்பு அல்லது பிற பொருள் அல்லது பொருட்களின் கலவை மூலம் செய்யப்பட்ட வார்ப்படங்களில் உள்ள வார்ப்பட உலோகம் மூலம் இரும்பு சாராத வார்ப்படங்களின் உற்பத்தி அல்லது கவச வார்ப்படங்கள் அச்சு வார்ப்படம் (அழுத்த அச்சு வார்ப்படம் உட்பட) மைய விலக்கு விசை வார்ப்படம் அல்லது தொடர்ச்சியான வார்ப்படம், மற்றும் அத்தகைய உற்பத்திக்கு இடைநிகழ்வான ஏதேனும் நடைமுறை;

(*c*) உலோகப் பாளங்கள், வட்டுகள், பாளங்கள் அல்லது அதைப் போன்ற பிற தயாரிப்புப் பொருள்கள் மற்றும் அதன் துண்டுகள், ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்கான இரும்பு சாராத உலோகம்/இரும்பு சார்ந்த உலோகம் மற்றும் அவை இரண்டும் கலந்தவற்றை உருக்குதல் மற்றும் வார்த்தல் ஆனால், பின்வருவனவற்றுக்கு இது பொருந்தாது.

(*i*) ஈயத்தை உருக்குதல் மற்றும் தயாரித்தல் மற்றும் மின் சேமக்கலங்கள் தொடர்புடைய ஏதேனும் நடைமுறை;

(*ii*) அச்சிடுகிற பணிகளுக்கான ஏதேனும் நடைமுறை:

(*iii*) குறைக்கிற செயல்பாடு மூலம் உலோகம் பெறப்படுகிற ஏதேனும் உருக்குகிற நடைமுறை அல்லது அத்தகைய செயல்பாட்டுக்கு இடைநிகழ்வான ஏதேனும் நடைமுறை; அல்லது

(*iv*) உலோகப் பாளங்கள் வடிவில் உருக்கைத் தயாரித்தல்; அல்லது

(*v*) பற்றாசு (உலோகங்களை ஒட்ட வைக்கும் கலவை) தயாரிப்பில் ஏதேனும் நடைமுறை அல்லது அத்தகைய தயாரிப்புக்கு இடைநிகழ்வான ஏதேனும் நடைமுறை; அல்லது

(*vi*) உலோக பாளங்கள், வட்டுகள் பாளங்கள் அல்லது அது போன்ற பிற பொருட்களைத் தயாரிப்பதற்கான அல்லது அதன் துண்டுகளைத் தயாரிப்பதற்கான ஈயம் அல்லது ஏதேனும் ஈயத்தை அடிப்படையாகக் கொண்ட கலப்பு உலோகத்தை உருக்குதல் மற்றும் வார்த்தல் அல்லது அத்தகைய உருக்குதல், வார்த்தல் அல்லது உரித்தலுக்கு இடைநிகழ்வான ஏதேனும் நடைமுறை.

**(2) விளக்கங்கள்—இந்த விவர அட்டவணையின் செயல் நோக்கத்திற்காக:—**

(*a*) ‘‘ஒப்புதலளிக்கப்பட்ட சுவாசக்கருவி’’ என்பது தலைமை ஆய்வாளர் ஒப்புதலளித்த ஒரு வகையைச் சேர்ந்த சுவாசக் கருவி என்று பொருள்படும்.

(*b*) ‘‘கும்மட்டும் அல்லது எரியுலை’’ என்பதில் அதனுடன் தொடர்புடைய கிரகிக்கும் அமைப்பும் அடங்கும்.

(*c*) உரிக்கிற அல்லது நன்னிலைச் செயற்பாடு’’ என்பதில், வார்ப்படத்திலிருந்து ஒட்டிக்கொள்கிற மணல், மையப் பகுதிகள் மேலெழுகிற பொருட்கள், ஒளி உமிழ்கிற பொருட்கள், வார்ப்புழைகள் மற்றும் ஏனைய உலோகம் ஆகியவற்றை அகற்றுதல் மற்றும் தூய்மையான, இலகுவான மேற்பரப்பை உருவாக்குதல் ஆகியவையும் அடங்கும். ஆனால், (*i*) அவை உரிக்கப்பட்ட பின்னர் அல்லது நன்னிலைக்கு வந்த பின்னர், வார்ப்படங்களை எந்திரப்படுத்தல் அல்லது ஒருங்கிணைப்பது தொடர்பாக வார்ப்படத்திலிருந்து, இடைநிகழ்வாக, உலோகத்தைப் பிரித்தெடுப்பது அல்லது (*ii*) இந்த விவர அட்டவணையின் பொருளுக்கு உட்பட்டு, கவிழ்த்துக்கொட்டுகிற யாதொரு நடைமுறை இதில் அடங்காது.

(*d*) ‘‘வார்ப்படச் சாலை’’ என்பது, இரும்பு அல்லது உருக்கு அல்லது இரும்பு சாராத வார்ப்படங்கள் (தேனிரும்பு தயாரிப்பு அல்லது உலோகப் பாளங்கள் வடிவில் உருக்கு தயாரிப்பு அல்லாதவை) மணல், வண்டல் மண்ணால் செய்யப்பட்ட வார்ப்படங்களில் வார்ப்பதன் மூலம் செய்யப்படுகிற வார்ப்படத் தொகுப்பு அல்லது பிற கலவைப் பொருட்கள் அல்லது கவச வார்ப்படம் அல்லது மைய விலக்கு விசை வார்ப்படம் மூலம் மணலால் கரையிடப்பட்ட உலோக வார்ப்படங்கள் அல்லது அழுத்த அச்சு வார்ப்படம் உட்பட அச்சு வார்ப்படம் ஆகியவை உற்பத்தி செய்யப்படுகிற மற்றும் வார்ப்படங்கள் மையப்பகுதிகள் ஆகியவற்றைத் தயாரித்தல் கவிழ்த்துக் கொட்டுகிற மற்றும் உரிக்கிற அல்லது நன்னிலைக்குக் கொண்டு வருகிற அத்தகைய நடைமுறையுடன் தொடர்புடைய இடைநிகழ்வான பின்வரும் ஏதேனும் நடைமுறை மேற்கொள்ளப்படுகிற தொழிற்சாலையின் பகுதிகள் என்று பொருள்படும்.

(*e*) ‘‘கவிழ்த்துக் கொட்டுகிற நடைமுறைகள்’’ என்பது உரித்தல், வார்ப்படத்தின் உட் பொதிவிலிருந்து அகற்றுதல், வார்ப்புழைகளையும் மேலெழுகிற பொருள்களையும் அகற்றுதல் ஆகியவை தொடர்புடைய பணிகளை மேற்கொள்கிறபோது வார்ப்படங்களிலிருந்து வார்ப்புகளை அகற்றுகிற அனைத்து முறைகள் என்று பொருள்படும்.

(*f*) ‘‘ஊற்றுகிற இடைகழி’’ என்பது உலோகம் வார்ப்படங்களுக்குள் ஊற்றப்படுகிற முதன்மை ஊடுவழியிலிருந்து அல்லது கும்மட்டத்திலிருந்து அல்லது எரியுலையிலிருந்து செல்லுகிற இடைகழி என்று பொருள்படும்.

(*g*) ‘‘தகுதிபெற்ற மேற்பார்வையாளர்கள்’’ என்பது, தலைமை ஆய்வாளாரால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் நிறுவனத்திலிருந்து இரும்பு சார்ந்த/இரும்பு சாராத தொழில்நுட்ப உத்திகுறித்த சான்றிதழுடன், அறிவியலில் இளநிலைப் பட்டம் அல்லது பொறியியலில் பட்டயம் அல்லது பட்டம் பெற்ற ஒரு நபர் என்று பொருள்படும்.

**3. சிலபொருட்களை, பிரிக்கிற பொருளாகப் பயன்படுத்துவதைத் தடை செய்தல்:—**

(1) ஒரு பொருள், உலர்ந்த பொருளின் எடையில் 5 சதவீதத்திற்கு மேற்பட்ட சிலிக்கா என்று கணக்கீடு செய்யப்பட்ட சிலிக்கான் கூட்டுப்பொருள் அடங்கிய பொருளாக இருக்குமெனில் அப்பொருள், பிரிக்கிற பொருளாகப் பயன்படுத்தப்படக் கூடாது. ஆனால், கீழ்க்கண்ட பொருள், ஏனைய பிற சிலிக்காவின் கலவையைக் கொண்டிராவிடில் அது, பிரிக்கிற பொருளாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்கக் கூடாது.

(*a*) ஜிர்கோனியம் சிலிக்கேட் (ஜிர்கான்)

(*b*) புடமிட்ட சீனக்களிமண்

(*c*) புடமிடப்பட்ட படிகஞ் சார்ந்த சுடுகளிமண்

(*d*) சில்லிமேனைட்

(*e*) புடமிட்ட அல்லது உருக்கிய இளகிய அலுமினியம்

(*f*) ஒலிவைன்

(*g*) இயற்கை மணல்

(2) நன்னிலைக்குக் கொண்டு வருகிற அல்லது உடைக்கிற நடைமுறையின் போது படிகிற தூள் அல்லது பிற பொருள், பிரிக்கிற பொருளாகப் பயன்படுத்தக் கூடாது. அல்லது பிரிக்கிற பொருளில் ஒரு கூறாகப் பயன்படுத்தப்படக் கூடாது.

**4. ஏற்பாடு மற்றும் சேமிப்பிடம்:—**

பணிபுரிகிற அறைகளில் பாதுகாப்பையும் தூய்மையும் மேம்படுத்துவதற்காக பின்வருபவை பின்பற்றப்பட வேண்டும்:—

(*a*) தேவையற்ற இடர்ப்பாடின்றி, பணி செய்ய இயலும் வகையில், வார்ப்படப் பெட்டிகள், வண்டல் தட்டுகள், ஏணிகள், மாதிரி சட்டப் பலகைகள், சட்டங்கள், பலகைகள், பெட்டி எடைகள் மற்றும் ஏனைய கனரகப் பொருள்கள் ஒழுங்குபடுத்தப்பட்டு வைக்கப்பட வேண்டும்;

(*b*) ஏனைய துணைக்கருவி மற்றும் கருவிகளை சேமித்து வைப்பதற்கான, உரிய மற்றும் எளிதில் அணுகத்தக்க வரிசையடுக்குகள், தொட்டிகள் அல்லது பிற கொள்கலன்கள் வகை செய்யப்பட்டு, பயன்படுத்தப்பட வேண்டும்;

(*c*) மணல், எரிபொருள், உலோகத்துண்டு துணுக்குகள் அல்லது பிற பொருள்கள் அல்லது எச்சங்கள் பெருமளவில் சேமித்து வைக்கப்படுகிறவிடத்து, அவ்வாறு சேமித்து வைப்பதற்காக, உரிய தொட்டிகள், அறைகள் அல்லது பிற கொள்கலன்கள் வகை செய்யப்பட வேண்டும்.

**5. கட்டுதல், நிறுவுதல் மற்றும் இயக்குதல்:—**

(1) மின்காந்த எரியுலை நிறுவப்படுகிற சுற்றுப்புறம் போதிய உறுதியைக் கொண்டிருக்க வேண்டும். மேலும், ஏதேனும் சமயத்தில் ஏதேனும் தீ அல்லது வெடி விபத்து ஏற்படுகிறபோது பாதிக்கப்படுகிற தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைகிற வகையில், அந்தப் பகுதி, தொழிற்சாலையின் பிற பகுதிகளிலிருந்து பிரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(2) எரியுலைக் கொட்டகை, நல்ல காற்றோட்ட வசதியுடன் இருக்க வேண்டும்.

(3) மின் காந்த எரியுலையின் அனைத்துப் பொருத்திகளும், இணைப்புகளும் சிறந்த கட்டுமானம், பலம் வாய்ந்த பொருள், போதிய உறுதி ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும்.

(4) எடுத்துச் செல்கிறபோது, பெரிய கரண்டி சாய்ந்து விடுவதைத் தவிர்ப்பதற்காக, போதிய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

(5) பாரந்தூக்கி மூலம் எடுத்துச் செல்லப்படுகிறபோது, உருக்கி வார்க்கப்பட்ட உலோகம் சிந்துவதைத் தவிர்ப்பதற்காக, பெரிய கரண்டியின் 3/4 பாகத்திற்கு மேல் உருக்கி வார்க்கப்பட்ட உலோகம் நிரப்பப்படக் கூடாது.

(6) மின்தூண்டல் உலைக்களம் செய்யப்பட்டுள்ள மூலப் பொருள், அதிக மின்வெப்பம் தாங்கும் விதமாகவும், வெப்ப அதிர்வுகளை தாங்கும் விதமாகவும், வேதி மாற்றங்களுக்கு உட்படாத விதமாகவும், குறைந்த வெப்பக்கடத்தியாகவும் விரிவடையும் குணகம் மற்றும் போதிய அளவு அடர்த்தியும் கொண்டதாகவும் உள்ளது.

(7) மின் தூண்டல் உலைக்களத்தின் உள்பகுதி பழுதுபட்டுள்ளதா அல்லது உடைந்து/தேய்ந்து போயுள்ளதா என்பதை இந்திய தர நிர்ணய அமைப்பின் வரையறைகளுக்கு ஏற்ப, ஒரு தகுதிப் பெற்ற கண்காணிப்பாளர் வாரம்தோறும் அதை சோதனை செய்ய வேண்டும்.

(8) இந்திய தர நிர்ணய அமைப்பில் குறிப்பிட்டுள்ளபடி மின்தூண்டல் உலைகளத்தின் பழுது நீக்கும்போது போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**6. தரை அமைப்பு:**

(1) இச்செயற்பாடுகள் நடைபெறும் மனையக பணியிடங்களின் தரைத்தளம், பிற பகுதிகளின் மண்தரைபோலன்றி கடினமான பொருட்களைக் கொண்டு அமைக்கப்பட வேண்டும்.

(2) மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுக்கெற்றபடி மணல் தரைப்பரப்பு அமைக்கப்பட வேண்டுமேயன்றி பிற பகுதிகளில் தரைப் பரப்பு மணலால் அமைக்கப்படக்கூடாது.

(3) இத்தகைய மனையக பணியிடத்திலுள்ள மணல் தரை பரப்பு அனைத்தும், நடைமுறைக்கு உகந்த அளவில் சமமாகவும் உறுதியாகவும் இருக்குமாறு பராமரிக்கப்படவேண்டும்.

**7. தப்பிக்கும் வழி:**

எரியுலை மேடைகளின் எதிரெதிரான இரண்டுப் பக்கங்களிலிருந்தும் போதிய அகலம் கொண்ட குறைந்தது இரண்டு வழியாவது இருத்தல் வேண்டும்.

**8. அறிவிப்பைக் காட்டி வைத்தல்.**

மின்தூண்டல் உலைக்களத்தில் அருகில், நீர் பயன்படுத்தாமை முதலியன குறித்த அறிவிப்பைக் காட்டி வைக்க வேண்டும்.

**9. மின்தூண்டல் உலைக்களத்தில் துணுக்குகளை மின்னேற்றம் செய்தல்:**

(1) மின்தூண்டல் உலைக்களத்தில், இறுக்கமான உட்குழிவுகளுடன்கூடிய துணுக்குகளை மின்னேற்றம் செய்யக்கூடாது. மின்னேற்றம் செய்யப்பட வேண்டிய துணுக்குகள் உலர்ந்து இருப்பதுடன் எண்ணெய் அல்லது ஏனைய யாதொரு திரவம் அல்லது ஈரப்பதம் கொண்டிருக்கக்கூடாது.

(2) யாதொரு துணுக்குகளும், தகுதிவாய்ந்த கண்காணிப்பாளர் முன்னிலையில் முழுமையாக சரிப்பார்க்கப்பட்டாலன்றி மற்றபடி, மின்தூண்டல் உலைக்களத்தில் நிரப்பப்படக்கூடாது.

(3) துணுக்குகள் துண்டுகளாக வெட்டப்பட்டாலன்றி மற்றபடி, மூடப்பட்ட கொள்கலத்துடன் உலைக்களத்தில் வைக்கப்படக்கூடாது. அத்தகையக் கொள்கலம், தகுந்தவகையில் பாதுகாப்பாக அளிக்கப்பட வேண்டும்.

(4) மின்தூண்டல் உலைக்களத்தில், ஈரமான துணுக்குகள் எதனையும் மின்னேற்றம் செய்யக்கூடாது.

(5) அழுத்தப்பட்ட கட்டுவடிவில் பெறப்பட்ட துணுக்குகள் பிரிக்கப்பட்டு, வகைப்படுத்தப்பட்டு அதன்பின்னரே உலைக்களத்தில் நிரப்பப்பட வேண்டும்.

**10. மனையக தொழிற்தலங்கங்களில் தூய்மை:**

(1) ஒவ்வொரு மனையக தலத்தின் சுவர்களில் எட்டுமளவிலான பகுதிகளில் மேற்கொள்ளப்படும் துப்புறவுச் செயற்பாடுகள் மற்றும் அச்சுவர்களில் தரைப்பரப்பிலிருந்து 4.2 மீட்டருக்கு குறையாத உயரம் வரையில் தக்க முறையில் பொருத்தப்பட்டிருக்கும் அனைத்து வகைகளும் குறைந்தப்பட்சம் பதினான்கு மாதங்களுக்கு ஒருமுறையேனும் செவ்வனே தூய்மைப்படுத்தப்படும். இப்பத்தியின் படி மேற்கொள்ளப்படும் இத்தகைய ஒவ்வொரு திறனான துப்புரவு செயற்பாடு, அது செய்யப்பட்ட நாள் உள்ளிட்டு (ஐந்து மாதத்திற்கு குறையாத அல்லது ஒன்பது மாதத்திற்கு மிகாத, இதற்கு முந்தைய நீரால் அலம்பி சுத்தம் செய்தது மற்றும் பிற வகைகள்) பதிவுருவில் வைக்கப்படுதல்.

(2) செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு மனையக தொழிற்தளத்தில் மண்தரையல்லாத ஏனைய தரைப் பரப்பின் எட்டுமளவிலான பாகங்கள் ஒவ்வொரு பணி நாளிலும் ஒரு முறையேனும் தக்கமுறையில் செவ்வனே சுத்தம் செய்யப்படவேண்டும். மண் தளங்கள் நல்ல நிலையில் பராமரிக்கப்பட வேண்டும்.

**11. உருக்கிய உலோகங்களை மனிதர்கள் கையாளுதல்:—**

(1) உருக்கிய உலோகங்களை கையாளுவதில் ஈடுபடுத்தப்படும் அனைத்து நபர்களுக்கும் உருக்கிய உலோகம் அவர்களின் மீது தெறித்துவிழ நேரிடும் என்பதால் அப்பணிக்கென தக்கபடி பராமரிக்கப்பட்ட பணியிடம் அமைத்துக் கொடுக்கப்படும்.

(*a*) பாதுக்காப்பாக பணியை மேற்கொள்ள போதுமானதாக ‘‘.. மற்றும்

(*b*) நடைமுறைக்கு உகந்த அளவில் மேடுப்பள்ளமின்றி அமைக்கப்படும்.

(2) உருக்கிய உலோகம் உள்ள கொள் கலன்களை கையால் தூக்கிச் செல்லும் வகையிலான ஏதேனும் பணியில் ஈடுபட்டிருக்கும் பணியாளர்கள் அவ்வாறு நடந்து செல்லும் தரைப்பரப்பின் அனைத்து பாகங்களும் சமதளமாக அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

இருப்பினும் தேவையற்ற இடர்பாடுகளின்றி இச்செயற்பாடுகளை மேற்கொள்ள ஏதுவாக தேவையானபோது தரைத்தளத்திலிருந்து வேறுபட்ட மட்டத்தில் அமையப்பட்டிருக்கும் இடம் பணியில் ஈடுபட்டிருக்கும் ஏதேனும் நபருக்கு பாதுகாப்பாக அணுகத் தகுந்த அளவில் அமைக்கப்பட்டிருப்பின், அப்பணிபுரியும் இடத்தை அவ்வப்போது அல்லது விதிவிலக்கு மீறி பயன்படுத்துவதை இப்பத்தி எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது.

**12. கேங்வே மற்றும் ஊற்று ஊடுபாதைகள்.**

(1) இந்த அட்டவணை தயாரிக்கப்பட்ட பின்னர் நடைமுறைக்குத் தகுந்த வரையில் பயன்பாட்டிற்கென கட்டப்பட்ட அல்லது திரும்பக் கட்டப்பட்ட அல்லது மாற்றப்பட்ட மற்றும் இப்பத்தியில் கூறப்பட்டுள்ளவாறான ஒவ்வொரு பணி அறையில் மற்றும் ஏனையப் பிற அறைகளில் இப்பத்தியில் கூறப்பட்டுள்ள போதிய மற்றும் தெளிவாக விளக்கப்பட்டுள்ள வகையில் தக்கமுறையில் பராமரிக்கப்பட்டு அளிக்கப்படும் பிராதான கேங்வேயானது:—

(*a*) தரைப்பரப்பு பருமப் பொருட்களைக் கொண்டு சமதளமாக அமைக்கப்பட்டிருக்க வேண்டும், குறிப்பாக மண்தரையாக இருத்தல் கூடாது. உருக்கப்பட்ட உலோகங்கள் தற்செயலாக சிந்துவதை தடுப்பதற்கு போதுமான அளவைவிட அதிகமான அளவில் மண்போடப்பட்டிருக்கக்கூடாது.

(*b*) நடைமுறையில் முடிந்த அளவில் தடைகள் இன்றி அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(*c*) உருக்கப்பட்ட உலோக திரவங்களைக் கொண்டு செல்வதற்கு பயன்படுத்தப்படவில்லையெனில் குறைந்தப்பட்சம் 920 மி.மி. தடிமன் கொண்டதாக அமைய வேண்டும்.

(*d*) உருக்கிய உலோகங்களை கொண்டுச் செல்ல பயன்படுத்தப்படுமாயின்—

(i) தனிப்பட்ட வகையில் வாகனங்களில் கொண்டு செல்ல சட்டுவங்கள் பயன்படுத்தப்படும் நேர்வில், அகப்பையின் ஒட்டுமொத்த அகலத்தைவிட 600 மி.மி. அதிக அகலம் கொண்டதாகவும்;

(ii) இரண்டைவிட மிகாத நபர்களால் கைப்பிடிகளைப் பிடித்து எடுத்துச் செல்லப்படுகையில் குறைந்தப்பட்சமாக 620 மி.மி. அகலம்.

(iii) இரண்டைவிட மிகாத நபர்களால் கைப்பிடிகளைப் பிடித்துச் எடுத்துச் செல்லப்படுகையில் குறைந்தப் பட்சமாக 1.2 மீட்டர் அகலம் மற்றும்

(iv) கைப்பிடிகளைப் பிடித்து எடுத்துச் செல்லும் நபர்கள் இரண்டு திசைகளிலும் உடனிகழ்வாக செல்கையில் குறைந்தப் பட்சமாக 1.8 மீட்டர் அகலம்;

(2) இந்த அட்டவணை தயாரிக்கப்பட்ட பின்னர் இப்பத்தியில் கூறப்பட்டுள்ளவாறான பயன்பாட்டிற்கென கட்டப்பட்ட அல்லது திரும்பக் கட்டப்பட்ட அல்லது மாற்றப்பட்ட ஒவ்வொரு பணி அறையில் போதிய மற்றும் தெளிவாக விளக்கப்பட்டு தக்கவகையில் பராமரிக்கப்பட்டு அளிக்கப்படும் உற்று ஊறுடுபாதைகள் (aisile).

(*a*) தரைப்பரப்பு பருமப் பொருட்களைக் கொண்டு சமதளமாக அமைக்கப்பட்டிருக்க வேண்டும். குறிப்பாக மண்தரையாக இருத்தல் கூடாது. உருக்கப்பட்ட உலோகங்கள் தற்செயலாக சிந்துவதை தடுப்பதற்கு போதுமான அளவைவிட அதிகமாக அளவில் மண்போடப்பட்டிருக்கக்கூடாது.

(*b*) நடைமுறையில் முடிந்த அளவில் தடைகள் இன்றி அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(*c*) சட்டுவம் ஒன்றை இரண்டுக்கு மிகாத நபர்களால் பெரிய கரண்டிகள் கொண்டு உருக்கப்பட்ட உலோகங்கள் எடுத்துச் செல்லப்படுகையில் குறைந்தப் பட்சம் 460 மி.மி. அகலமாகவும், ஊற்று ஊடு பாதையின் ஓரங்களில் தரைப்பரப்பிலிருந்து 510 மி.மி. உயரத்தில் வார்ப்புகள் காணப்படுமெனில், ஊற்று ஊடு பாதையின் அகலம் 600 மி.மி. விட குறைவாக இருத்தல் கூடாது.

(*d*) உருக்கப்பட்ட உலோகம் கை சட்டுவங்களில் அல்லது புல் சட்டுவங்கள் (bull ladies) இரண்டுக்கு மிகாத நபர்களால் எடுத்துச் செல்லப்படுகையில் அவற்றின் அகலம் 760 மி.மி. அளவாவது இருத்தல் வேண்டும்.

(*e*) உருக்கப்பட்ட உலோகங்கள் பாரந்தூக்கிகள் தள்ளுவண்டிகள் அல்லது வாகனங்களில் சட்டுவங்கள் மூலம் எடுத்துச் செல்லப்படுகையில் பாதுகாப்பாக கொண்டு செல்வதற்கு போதுமான அகலத்தில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(3) துணைப் பத்திகள் (1) மற்றும் (2) இல் கூறப்பட்டுள்ளவைகள் எவையேனும் பணி அறை அல்லது பணி அறையில் ஒரு பகுதிக்கு பொருந்தாது, ஏனெனில் அங்க செய்யப்படும் பணிகளின் தன்மைக்கு ஏற்றவாறு, அந்தப்பணியறையின் தரைப்பரப்பு அல்லது பணியறையின் அப்பகுதி மணலால் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(4) இந்தப் பத்தியில் ''இப்பத்தியில் கூறப்பட்டுள்ளவாறான பணியறை'' என்பது உருக்கப்பட்ட உலோகங்கள் எடுத்துச் செல்லப்படும் அல்லது பயன்படுத்தப்படும் இரும்பு அல்லது இரும்பு அல்லாத பிற உலக வார்ப்பகம் என்பதைக் குறிக்கும் இப்பத்தியில் கூறப்பட்டுள்ள நோக்கங்களுக்காக அட்டவணை தயாரிக்கப்பட்டப் பின்னர் பயன்பாட்டிற்கென கட்டப்பட்டதாக, திரும்பக் கட்டப்பட்டதாக அல்லது மாற்றப்பட்டதாகக் கருதப்படும்.

**13. கபோலாக்கள் (Cupola) மற்றும் எரி உலைகள் அருகாமையில் செய்யப்படும் பணிகள்:**

கபோலாவிலிருந்தோ அல்லது எரி உலையிலிருந்தோ அல்லது உருக்கிய உலோகம் வெளிவரும் துவாரத்தில் பொருத்தமாக வைக்கப்பட்டிருக்கும் கரண்டியிலிருந்தோ உருக்கிய உலோகக் கூழ் எடுத்துச் செல்லும் நபர்களுக்கு யாதொரு ஆபத்தும் நேர்ந்துவிடக்கூடாது என்பதற்காக கபோலா அல்லது எரி உலையை நல்ல விதத்தில் பயன்படுத்தும் விதமாக பராமரிப்பதற்கென அந்த இடைப்பட்ட தூரத்தில் நடத்தப்பட வேண்டியப் பணிகளை உரியக் கால அளவில் உரிய பணி நிலைமைகளில் செயற்படுத்தப்பட வேண்டிய அவசியம் ஏற்படும் நேர்வைத் தவிர, பிறக் காலங்களில் ஒரு கபோலா (cupola) அல்லது எரி உலையிலிருந்து உருக்கிய உலோகக் கூழ் பீறிட்டு வெளிப்படும் துவாரத்திலிருந்து செங்குத்தான நேர்க்கோட்டில் 4 மீட்டர் தூரம் வரைக்கும், அல்லது துவாரத்தின் இறுதியில் பொருத்தமாக வைக்கப்பட்டிருக்கும் பெரிய கரண்டியின் அண்மை பகுதியிலிருந்து செங்குத்தான நேர் கோட்டில் 2.4 மீட்டர் தூரம் வரையில், யாதொரு நபரும் எத்தகையப் பணியும் மேற்கொள்ளக் கூடாது.

**14. தூசு மற்றம் புகை:**

(1) நிலப்பரப்பிலிருந்து வெட்டியெடுக்கப்படும் நிலக்கரி, சுட்டக்கரி, அல்லது விறகுகள் ஆகியன, புகை மற்றும் பிற தூசுகளை வெளியேற்றி பணியறையில் சூழலை கெடுக்காத விதத்தில் நடவடிக்கைகள் எடுத்தால் ஒழிய, சட்டுவங்களைச் சுட்டுவங்களைச் சூடாக்கவோ அல்லது உலர வைக்கவோ அவை பயன்படுத்தக் கூடாது.

(2) வார்ப்புகளை உலர வைப்பதற்கு நிலபரப்பிலிருந்து வெட்டியெடுக்கப்படும் நிலக்கரி, சுட்டக்கரி, அல்லது விறகுகளினால் உண்டாக்கப்படும் நெருப்பு தேவைப்படும் நெருப்பு அளவில், தவிர்க்கமுடியாத சூழ்நிலைகள் எழுந்தாலன்றி பயன்படுத்தக் வடாது.

(3) வார்ப்பு அடுப்புகள், கோர் அடுப்புகள் மற்றும் பதப்படுத்தும் கொதிகலன்கள் இயன்ற வரையில் கெடுதல் விளைவிக்கும் புகைகளை வெளியேற்றி பணியறைக்குள் புகுந்துவிடாதபடி தடுக்கப்படும்வகையில் வடிவமைத்துக் கட்டப்பட்டு பராமரிக்கப்படவேண்டும்.

**(4) வெளியேற்றும் நடைமுறைகள்:**

(*a*) வார்ப்பகத்தின் ஒரு தனிப்பட்ட பகுதி ஓர் அறையாகவோ அல்லது ஒரு பாகமாகவோ பிரிக்கப்பட்டு அதில் இயன்ற வரையில், திறனான மற்றும் தக்க வகையிலான சாதாரணமான புகைப்போக்கி காற்றோட்ட வசதி, மற்றும் உயர்தர பொது காற்றோட்ட வசதி உள்ள இடத்தில் செயற்படுத்தப்படவேண்டும்.

(*b*) வார்ப்பகம் அமைக்கப்பட்டிருக்கும் பகுதியில் ஒரு இயன்ற வரையில் திறன் ஆன மற்றும் தக்க வகையிலான சாதரணமான புகைப்போக்கி காற்றோட்ட வசதி அல்லது அப்பகுதியின் தேவைக்கு இது போதுமானதாகவில்லையெனில், ஒரு உயர்தர பொது காற்றோட்ட வசதி உள்ள இடத்தில் செயற்படுத்தப்பட வேண்டும்.

**(5) அனைத்து ஆடைத் தொகுதி மற்றும் ஏற்பாட்டுப் பணிகள்:**

(*a*) வார்ப்பகத்திலிருந்து தக்க முறையில் தனியாக பிரித்து அமைக்கப்பட்டிருக்கும் ஒரு தனி அறையில் மேற்கொள்ளப்படும்; அல்லது

(*b*) இந்நோக்கத்திற்காக வார்ப்பகபகுதிலிருந்து தனியாக பிரிக்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ள ஒரு பகுதியில், தூசு உற்பத்தியாகும் இடத்திற்கு மிகமிக அருகாமையிலிருந்து செயற்படும் விதத்தில், முடிந்தளவு திறனான மற்றும் தக்க முறையிலான அமைக்கப்பட்டுள்ள சாதாரணமான புகைப்போக்கி காற்றோட்ட வசதியோ அல்லது தூசுகளைக் கட்டுப்படுத்தும் வகையிலான காற்றோட்ட வசதியோ மேற்கொள்ளப்படும்.

**15. புகைப்போக்கி இயந்திரத்தின் பராமரிப்பும் ஆய்வும்:**

(1) தூசு மற்றும் புகையினை உறிஞ்சி, கட்டுப்படுத்தவோ அல்லது அமுக்கவோ செய்யும் காற்றோட்ட கருவிகள் சரியான விதத்தில் பராமரிக்கப்பட வேண்டும்.

(2) தூசு அல்லது புகைகளை உறிஞ்சுவதற்கும் கட்டுபடுத்துவதற்கும் அல்லது அமுக்குவதற்குமாக பயன்படுத்தப்படும் அனைத்து காற்றோட்ட வசதி கருவிகளும் பொறுப்பான ஒரு நபரால் வாரம் ஒரு முறை பராமரிக்கப்பட வேண்டும். குறைந்த பட்சமாக ஒவ்வொரு 12 மாதங்களுக்கு ஒரு முறை திறம்பட்ட ஒருவரால் முழுமையாக ஆய்வுச் செய்யப்பட்டு சோதனைச் செய்யப்பட வேண்டும். இத்தகைய ஒவ்வொரு சோதனையின் முடிவு விவரங்கள் ஒரு ஆய்வாளரால் ஆய்வுக்கென அளிக்கப்பட அனுமதிக்கப்பட்டுள்ள பதிவேட்டில் பதிவு செய்யப்படும். இத்தகைய ஏதேனும் ஆய்வு மற்றும் சோதனையில் ஏதேனும் குறைபாடுகள் காணப்படுமாயின் அது குறித்த அறிக்கை எழுத்து வடிவில் சோதனை மற்றும் ஆய்வு நடத்துபவரால் தொழிற்சாலையின் உரிமையாளருக்கு அல்லது மேலாளருக்கு அளிக்கப்படும்.

**16. பாதுகாப்பு ஆயத்தக் கருவிகள்:**

(1) தொழிற்சாலையை நடத்துபவர் அங்குள்ள தொழிலாளர்களின் பாதுகாப்பிற்கெனக் குறிப்பிட்டுள்ள பாதுகாப்பு ஆய்த்தக் கருவிகளை அளித்து அவற்றைப் பாராமரிக்க வேண்டும்.

(*a*) சூடான உலோகங்களைக் கையாளும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் பணியாளர்களின் கைகளுக்கு தீக்காயம், கொப்பளம், அல்லது வடு ஏற்படுவதிலிருந்தும், தேனீரும்பு, குத்துச்சாந்து, மற்றும் இத்தகையப் பிறப்பொருட்களைக் கையாளும் போது கைகளுக்கு வெட்டுக் காயம் அல்லது உராய்விலிருந்து பாதுகாப்பு அளிக்கும் வகையில் சரியான கையுறைகள் அல்லது பிறப்பாதுகாப்பு சாதனங்கள்.

(*b*) தொழிற்சாலையில் பொருத்தப்பட்டிருக்கும் புகைப்போக்கி ஏற்பாடுகளின் மூலம் விரைவாகவும் செம்மையாகவும் வெளியேற்றப்படமுடியாத அளவிலான கனமான மற்றும் அடர்த்தியான தூசு உருவாக்கப்படும் விதத்திலான ஏதேனும் பணியினை மேற்கொள்ளும் தொழிலாளர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்ட நச்சாவித் தடுப்பு மூச்சுக் கவசங்கள்.

(2) துணைப் பத்தி (1) இன் (*b*) பகுதியின் நோக்கத்திற்கென ஒரு நபருக்கு அளிக்கப்பட்ட மூச்சுக் கவசங்கள் சுத்தமாக சுத்தம் செய்யப்பட்டு கிருமி நீக்கம் செய்யப்பட்டாலொழிய வேறொரு நபரால் அணியப்படக்கூடாது.

(3) நபர்கள் அவர்களின் ஏதேனும் பணி நேரத்தில்;

(*a*) உலோக கூழ் பீறிட்டு வெளிவரும் தூவாரத்தில் பணியாற்றுபவர் அல்லது கபோலா அல்லது சூலையில் பணியிலிருக்கும் போது அவர் உடல் அவர் அங்குள்ள உலாகங்களின்மீது படநேரிட்டால் அதன் உயர் வெப்பநிலையால் காயம் ஏற்படும் போது; அல்லது

(*b*) உருக்கப்பட்ட உலோகங்களை ஊற்றுவதில் உதவி செய்யும் பணியில் ஈடுபட்டிருக்கும்போது; அல்லது

(*c*) உருக்கிய உலோகங்கள் சட்டுவங்கள் அல்லது கைகளில் சுமந்துக் கொண்டோ அல்லது பலபேர் சேர்ந்து தூக்கிக்கொண்டு செல்கையில்; அல்லது

(*d*) உருக்கிய உலோகங்களை விரைவாக இயக்கி வெளிதள்ளும் பணிவகையில் ஈடுபட்டுள்ளோர்களுக்கு அவை உடலில் பட்ட மாத்திரத்தில் சூடு புண்கள், பாதம் மற்றும் கணுக்கால்களில் கொப்பளங்கள் ஏற்படுத்தும் ஆபத்தைத் தடுக்கும் விதத்தில் சரியான காலணிகள், காலுறைகள் அளிக்கப்பட வேண்டும்.

(4) உருக்கி ஊற்றப்பட்ட உலோகத் பொருட்களிலிருந்து (உருக்கி வார்க்கப்பட்ட உலோகங்களின் சிதறல்கள் மற்றும் தீப்பொறிகள் மற்றும் யாதொரு செய்முறையின்போது வீசியெறியப்படும் துணுக்குகள்) பாதுகாப்பதற்காக, உரிய, தகுந்த தட்டிகளுக்கு வகைசெய்யப்படும்.

(5) தொழிற்சாலை வைத்திருப்போர், சேமிப்பிடத்திற்கு தகுந்த இடவசதிக்கு வகைசெய்து பராமரித்து வருவதுடன், இந்த பத்தியக்கிணங்க தொடர்ந்து வழங்கப்பட்ட பாதுகாப்பான சாதனத்தை சுத்தப்படுத்தி பராமரிப்பதற்கான தகுந்த ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.

(6) ஒவ்வொரு நபரும், (1) மற்றும் (4) ஆம் துணைப்பத்திகளுக்கிணங்க, அவருடைய பாதுகாப்பிற்காக வழங்கப்பட்ட சாதனத்தை முழுமையாகவும் முறையாகவும் பயன்படுத்த வேண்டும். இதில் ஏதேனும் பழுது ஏற்பட்டிருப்பின் அல்லது தொலைந்து போயிருப்பின் அது குறித்து, தொழிற்சாலை வைத்திருப்பவர், மேலாளர் அல்லது ஏனைய உரிய நபரிடம் காலம் தாழ்த்தாது உடனடியாக தகவல் தெரிவிக்க வேண்டும்.

(7) உலைக்களம்/வார்ப்புரு குழி பகுதியில் பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கு, பருத்தி ஆடைகள், பாதுகாப்பான ஷீக்கள், காலுறைகள், மேல்அங்கி, முகத்தை பாதுகாக்கும் கவசம், கையுறைகள் மற்றும் பாதுகாப்பு தலைக்கவசம் வழங்கப்பட வேண்டும்.

(8) துணுக்குகளை பிரித்தெடுப்பதில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பான ஷீக்களும் கையுறைகளும் வழங்கப்படவேண்டும்.

(9) மின் உலைகளத்தின் நடைமேடையில் பணிபுரிகின்ற தொழிலாளர்கள் அனைவருக்கும் தீத்தடுப்பு மற்றும் வெப்பத்தை தடுக்கின்ற ஆடைகள் வழங்கப்படவேண்டும்.

**17. பயிற்சியும் கண்காணிப்பும்.—** (1) இந்த அட்டவணையின் கீழுள்ள அனைத்து நடவடிக்கைகளும், தகுதிவாய்ந்த கண்காணிப்பாளர்கள் மேற்பார்வையில் மேற்கொள்ளப்படவேண்டும்.

(2) வார்படச் சாலைகளிலும் உலைக்களங்களிலும், செயல்பாடு மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்கின்ற தொழிலாளர்களுக்கு போதிய பயிற்சி அளிக்கப்படவேண்டும்.

**18. கழிப்பறை மற்றும் குளியல் வசதிகள்.** (1) வார்படச் சாலையில் பணியமர்த்தப்பட்ட அனைத்து தொழிலாளர்களின் பயன்பாட்டிற்கென, துப்புரவான நிலையில் பேணப்பட்டுவரவேண்டும்.

(a) கழிப்பறையில்—

(i) யாதொரு நேரத்தில் பணியமர்த்தப்பட்ட அத்தகைய ஒவ்வொரு 10 நபர்களுக்கும் 60 செ.மீ. அளவிற்கேனும் அனுமதிக்கின்ற வகையில் போதிய நீளத்துடன் கூடிய கழிவு நீர்க்குழாய் ஒன்றுடன் பொருத்தப்பட்ட பொறியமைவு இல்லாத, ஊடுருவ இயலாத மேற்பரப்புடன் கூடிய தொட்டி ஒன்று, தொட்டிக்கு மேலுள்ள ஜெட்டுகள் அல்லது குழாய்களிலிருந்து, 60 செ. மீட்டருக்கு மேற்படாத இடைவெளிகளில் தூய்மையான நீரை தொடர்ந்து வழங்குதல்; அல்லது

(ii) ஏதேனும் ஒரு நேரத்தில் பணியமர்த்தப்பட்ட அத்தகைய 10 நபர்கள் ஒவ்வொருவருக்கும் தொடர்ந்து தூய்மையான நீரை வழங்குகின்ற ஒரு குழாய் அல்லது நிலைகுத்துக் குழாயேனும் அமைக்கப்படவேண்டும். குழாய் அல்லது நிலை குத்துக்குழாய்க்கும் இடையேயான இடைவெளி 1.2 மீட்டருக்கு குறைவாக இருக்க வேண்டும்; மற்றும்

*(b)* இப்பகுதியின்கீழ் வகைச்செய்யப்பட்ட மொத்தக் கழிப்பறைகளில் ஒரு பாதிக்கும் குறையாத எண்ணிக்கைகளில்—

(a) குளியலறை வடிவில் அமைந்திருக்க வேண்டும்;

(b) தகுந்தவற்றுடன் தயாரிக்கப்பட்ட தூய்மையான துண்டுகள் போதிய அளவில் வழங்கப்பட்டு ஒவ்வொருநாளும் மாற்றி வைக்கப்படவேண்டும். நகத்தைச் சுத்தப்படுத்தும் தூரிகைகளும் சோப்புகளும் போதிய அளவில் வழங்கப்பட வேண்டும்.

(2) துணைப்பத்தி (1)—இன் செயல் நோக்கங்களுக்காக கருதப்பட்ட வசதிகள், பொறுப்பான நபர் அல்லது நபர்களிடம் ஒப்படைக்கப்பட்டு சுகாதாரமானவகையில் தூய்மையாகப் பேணப்படவேண்டும்.

**19. உலோகக்கழிவுகளை ஒருவகைச் செய்தல்.—**உருக்கிவார்க்கப்பட்ட உலோகத்திலிருந்து நீக்கப்பட்ட கழிவுகள் அல்லது உலைக்களத்திலிருந்து எடுக்கப்பட்ட கழிவுகள், தகுந்த கொள்கலனில் உடனே வைக்கப்படவேண்டும்.

**20. கழிவுகளை ஒருவகைச் செய்தல்.—**வார்ப்புகள் தட்டி எடுக்கப்பட்டு, தகுந்த முறையில் செய்துமுடிக்கப்பட்ட உடனேயே, உலோக வார்ப்பிலிருந்து (சுட்டக்கழிவுமண் உட்பட) அனைத்துக் கழிவுப் பொருட்களையும் ஒருவகைச் செய்வதற்கு, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

**21. வெளியில் வைக்கப்பட்டுள்ள பொருட்களும் சாதனமும்.—**வெளியில் வைக்கப்பட்டுள்ள பொருட்களும் சாதனமும் (தற்காலிகமாக அல்லது எப்பொழுதாவது மட்டுமே அவ்வாறு வெளியில் வைக்கப்பட்ட பொருட்களும் சாதனமும் உட்பட) தேவையற்ற இடர்பாட்டைத் தவிர்ப்பதற்காக அவ்வாறு அடுக்கி வைக்கப்படவேண்டும். அத்தகைய பொருட்கள் மற்றும் சாதனங்கள் அனைத்தையும் பாதுகாப்பான வகையில் எடுத்துச் செல்வதற்கு வகைச்செய்யப்படுவதுடன், நடைமுறையில் சாத்தியமானவகையில், முறையாகப் பராமரிக்கப்படும் சாலைவழியில் அல்லது நடைப்பாதை வழியில் எடுத்துச்செல்லப்படவேண்டும். அத்தகைய சாலைகள் அல்லது நடைப்பாதைகள், உறுதியாகவும் சமதளப்பரப்புடன் இருப்பதுடன் இடையூறு ஏதுமின்றி இருக்கவேண்டும்.

**22. மருத்துவ வசதிகளும் ஆய்வுகள் மற்றும் சோதனைகள் குறித்த பதிவுருக்களும்.—**(1) இந்த விவர அட்டவணைக்கு ஒத்திசைவான வகையில் தொழிற்சாலை வைத்திருக்கின்ற ஒவ்வொருவரும் கீழ்க்கண்டவற்றைப் பின்பற்றவேண்டும், அவையாவன:—

(a) தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வாளரின் ஒப்புதலுக்குட்பட்ட வேலைவாய்ப்பில் பணியமர்த்தப்படுகின்ற தொழிலாளர்களின் மருத்துவக் கண்காணிப்பிற்காக, தகுதிவாய்ந்த மருத்துவத் தொழில்புரிபவர்களைப் பணியமர்த்த வேண்டும்.

(b) பகுதி (a)–இல் குறிப்பிடப்பட்ட செயல்நோக்கங்களுக்காக, மருத்துவத் தொழில்புரிபவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளுக்கும் வகைச் செய்யப்பட வேண்டும்.

(2) மருத்துவத் தொழில்புரிபவர்கள் மேற்கொண்ட அத்தகைய பரிசோதனைகள், தனிப்பதிவேட்டில் வைத்துவரப்பட்டு, தொழற்சாலைகளின் தலைமை ஆய்வாளரால் ஏற்பளிக்கப்படவேண்டும். இந்த பதிவேடுகள், ஆய்வாளரால் பார்வையிடுவதற்கு தயாராக வைக்கப்படவேண்டும்.

**(23) சான்றளிக்கின்ற அறுவைச்சிகிச்சை மருத்துவரால் மேற்கொள்ளப்படுகின்ற மருத்துவப் பரிசோதனை–(1)** பத்தி (1)–ல் குறிப்பிடப்பட்ட செய்முறைகளில் பணியமர்த்தப்பட்ட ஒவ்வொரு தொழிலாளரும், அவர் முதலில் பணியமர்த்தப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்குள், சான்றளிக்கின்ற அறுவைச்சிகிச்சை மருத்துவரால் பரிசோதிக்கப்பட வேண்டும். அத்தகைய பரிசோதனைகளில், தோல் அழற்சிக்கான தோல் பரிசோதனை, நுரையீரல் செயல்பாடு பரிசோதனை, மார்பு எக்ஸ்ரே பரிசோதனை ஆகியவை அடங்கும். சான்றளிக்கின்ற அறுவைச்சிகிச்சை மருத்துவர், அத்தகைய வேலைக்கு அவர் தகுதியானவர் என சான்றளித்தால் மட்டுமே எந்தவொருத் தொழிலாளரும் அவர் பணியில் சேர்ந்த 15 நாட்களுக்குப்பின்னர் பணிபுரிவதற்கு அனுமதிக்கப்படுவர்.

(2) பத்தி (1)–ல் குறிப்பிடப்பட்ட செய்முறைகளில் பணியமர்த்தப்பட்ட ஒவ்வொரு தொழிலாளரும், ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒருமுறையேனும் சான்றளிக்கின்ற அறுவைச்சிகிச்சை மருத்துவர் ஒருவரால் மீண்டும் பரிசோதிக்கப்பட வேண்டும். சான்றளிக்கின்ற அறுவைச்சிகிச்சை மருத்துவர், உரியதென கருதுகின்ற நேர்வில், அத்தகைய‌ப் பரிசோதனைகளில் மார்பக எக்ஸ்ரே பரிசோதனை நீங்கலாக (இது மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை செய்யப்படும்) துணைப்பத்தி (1)–ல் உள்ள அனைத்துப் பரிசோதனைகளும் அடங்கும்.

(3) சான்றளிக்கின்ற அறுவைச்சிகிச்சை மருத்துவர் தொழிலாளரைப் பரிசோதித்தப்பின்னர், படிவம் எண் 27 – இல் மருத்துவ தகுதிச் சான்றிதழ் ஒன்றை அளிப்பார். பரிசோதனை செய்யப்பட்டவை மற்றும் மீண்டும் பரிசோதனைகள் செய்யப்பட்டவை குறித்து சான்றிதழில் பதிவுச் செய்யப்பட்டு அந்தச் சான்றிதழ் தொழிற்சாலை மேலாளரின் பாதுகாப்பில் வைக்கப்படும். இந்தப் பரிசோதனைகளின் தன்மை மற்றும் முடிவுகள் உட்பட துணைப்பத்திகள் (1) மற்றும் (2)–இன்கீழ் மேற்கொள்ளப்பட்ட அத்தகைய சோதனைக்குறித்தப் பதிவினை, படிவம் எண் 17 இல் உள்ள உடல்நலன் குறித்தப் பதிவேட்டில் சான்றளிக்கின்ற அறுவைச்சிகிச்சை மருத்துவரால் பதிவுச் செய்யப்படவேண்டும்.

(4) மருத்துவத் தகுதிச் சான்றிதழும், உடல்நலன் குறித்தப் பதிவேடும் ஆய்வாளரால் பார்வையிடப்படுவதற்கு தயாராக வைக்கப்படவேண்டும்.

(5) தொழிலாளர் அங்குத் தொடர்ந்துப் பணியாற்றுவதால் அவரின் உடல்நலத்திற்கு மிகவும் ஆபத்து ஏற்படும் என்ற காரணத்தால் மேற்சொன்ன செய்முறைகளில் பணிபுரிவதற்கு தொழிலாளர் தகுதியுடையவாராக இல்லை என எந்த நேரத்திலாவது சான்றளிக்கின்ற அறுவைச்சிகிச்சை மருத்துவர் கருதுவாராயின், அவரது முடிவுகளை மேற்சொன்ன சான்றிதழிலும் உடல்நலன் குறித்தப் பதிவேட்டிலும் அவர் பதிவுச் செய்யவேண்டும். அந்த ஆவணங்களில், அவர் பதிவு செய்தவற்றில், மேற்சொன்ன நபரானவர், மேற்சொன்ன செய்முறையில் எந்தக் கால அளவில் பணியாற்றுவதற்குத் தகுதியற்றவராக இருந்தார் என்பதும் குறிப்பிடப்பட வேண்டும். அத்தகைய நபர், சான்றளிக்கின்ற அறுவைச்சிகிச்சை மருத்துவரின் கூற்றுப்படி அவர் முழுமையான உடற்திறனின்றி இருந்தால்மட்டுமே அவருக்கு மாற்று வேலைவாய்ப்பு வசதிகளுக்கு வகைச் செய்யப்படும் இந்த நேர்வில், பாதிக்கப்பட்ட நபருக்கு தகுந்தமுறையில் மறுவாழ்வு அளிக்கப்படும்.

(6) துணைப் பகுதி (5)–இல் தெரிவிக்கப்பட்டவாறாக, பணியாற்றுவதற்குத் தகுதியற்றவர் என்று கண்டறியப்படுமாயின் சான்றளிக்கின்ற அறுவைச் சிகிச்சை மருத்துவர் மேலும் பரிசோதனைச் செய்தபின்னர், அத்தகைய செய்முறைகளில் வேலைவாய்ப்பிற்குப் பொருத்தமானவர் என அவர் மீண்டும் சான்றளித்தாலன்றி மற்றபடி, தொழிலாளர் மேற்சொன்ன செய்முறைகளில் மீண்டும் பணியமர்த்தப்பட வேண்டும் அல்லது பணியாற்றுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்.

(7) உலைகளம் மற்றும் வார்ப்புரு குழிப்பகுதியில் பணிபுரிகின்ற தொழிலாளர்கள், ஆண்டிற்கொருமுறை தகுதிவாய்ந்த மருத்துவத் தொழில்புரிபவர்களால் மருத்துவரீதியில் பரிசோதிக்கப்பட வேண்டும்.

**(24) விலக்களிப்புகள்:–**

யாதொரு தொழிற்சாலையைப் பொறுத்தவரையில், அசாதாரண சூழல் அல்லது வழக்கமான செய்முறை அல்லது ஏனைய யாதொரு காரணத்தால், தொழிற்சாலையில் தொழிலாளர்களின் பாதுகாப்பிற்கு, இந்த அட்டவணையிலுள்ள அனைத்து விதித்துறைகள் அல்லது யாதொரு விதித்துறைகள் தேவையில்லையென தலைமை ஆய்வாளர் மனநிறைவுக் கொள்வாராயின், அவர் எழுத்துமூலமாக சான்றிதழ் அளிப்பதன் பேரில் அவருடைய விருப்பத்தின் பேரில் எந்த நேரத்திலும் அவற்றைத் திரும்பப்பெற்று யாதொரு நிபந்தனைகள் இருப்பின் அதுகுறித்து தெரிவிக்கப்படுவதற்கு உட்பட்டு அத்தகைய அனைத்து விதித்துறைகளிலிருந்து அல்லது யாதொரு விதித்துறையிலிருந்து அத்தகையத் தொழிற்சாலைக்கு விலக்களிக்கலாம்.

## அறிவிக்கை–II

*[அரசாணை நிலை எண் 13, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (எம்2)த் துறை, 13, ஜனவரி 2012]*

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) 21 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 112–வது பிரிவின்படியும், வெளியிடக் கருதப்பட்டுள்ள கீழ்க்காணும் வரைவுத்திருத்தம், இதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக, மேற்சொன்ன சட்டத்தின் 115 ஆம் பிரிவில் சொல்லியுள்ளவாறு இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளில் இருந்து நாற்பத்தைந்து நாட்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் இந்த வரைவு–திருத்தம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், இது தொடர்பாக எவரிடமிருந்தேனும் வரப்பெறும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ் நாடு அரசு பரிசீலிக்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது,. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதுதேனும் இருப்பின் அதனை, தொழிலாளர் நல தலைமை ஆய்வாளர், சேப்பாக்கம், சென்னை–600 005 மூலமாக அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர்–வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு இருபடிகளில் அனுப்பிவைக்க வேண்டும்.

## திருத்தங்கள்

53 ஆம் பகுதியைச் சேர்ந்த (1) துணைப் பகுதியின்கீழ் உள்ள விவர அட்டவணை IV–க்கும் பதிலாக, பின்வரும் விவர அட்டவணை அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

## விவர அட்டவணை–IV

## இரப்பர் மற்றும் பிளாஸ்டிக் ஆலைகள், மற்றும் உட்செலுத்தும் வார்ப்பு இயந்திரம்.

**1. விளக்கங்கள்.—**இந்த விவர அட்டவணையின் நோக்கத்திற்காக (a) ‘இரப்பர் ஆலை அல்லது பிளாஸ்டிக் ஆலை என்பது இரப்பர் அல்லது இரப்பர் பொருட்கள் அல்லது பிளாஸ்டிக் அல்லது பிளாஸ்டிக் கலவையை முறித்தல், பிளவுபடுத்துதல், உராய்வு செய்தல், கலவையாக்குதல், சுத்திகரித்தல் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்படுகிற உருளைகளுடன் கூடிய இயந்திரங்கள் என்று பொருள்படும்.

(b) ‘‘பளபளப்பாக்கும் இயந்திரம்’’ என்பது இரப்பர் கலவைகள், மற்றும் பிளாஸ்டிக் அல்லது பிளாஸ்டிக் கலவைகளைத் தகடாக்குதல், துண்டாக்குதல், மேற்பூச்சு பூசுதல், பரப்புதல் ஆகியவற்றிற்காகப் பயன்படுத்தப்படுகின்ற உருளையுடன் கூடிய இயந்திரம் என்ற பொருள்படும்.

(c) ‘உட்செலுத்தும் வாய்ப்பு இயந்திரம்’ என்பது உருளையிலிருந்து வெப்பப்படுத்தி மிருதுவாக்கப்பட்ட பிளாஸ்டிக் பொருளை அதனுடன் தொடர்புடைய குளிர்ச்சியான துவாரத்தினுள் செலுத்தி, விரும்பிய வடிவில் பொருட்களைப் பெறுவதற்கான வார்ப்பு இயந்திரம் எனப் பொருள்படும்.

**2. இயந்திரங்களை நிறுவுதல்.—**தற்போது நிறுவப்பட்டுள்ள இரப்பர் மற்றும் பிளாஸ்டிக் இயந்திரங்களில், வார்ப்பட உருளையின் முன்பகுதிக்கான மேல் முனையானது தரையிலிருந்து அல்லது பணிபுரியும் நிலையில் இருந்து ஒரு மீட்டருக்கும் குறைவான உயரத்தில் நிறுவப்பட்டிருக்குமாயின், அவை ஒரு மீட்டருக்கும் குறையாத உயரத்தில் நிறுவப்பட வேண்டும். வலுவான மற்றும் உறுதியான பாதுகாப்புக் கழி, இயந்திரத்தின் முன்பகுதி முழுவதும் பொருத்தப்பட வேண்டும். அத்தகைய நிலையில், இயந்திரத்தை இயக்குபவர், வழக்கமாகப் பணிபுரியும் நிலையில் இருந்து உருளையின் நுனிப்பகுதியை அடைய இயலாது.

**3. பாதுகாப்பு ஏற்பாடுகள்.—(1)** (a) இரப்பர் மற்றும் பிளாஸ்டிக் ஆலைகள் கூல இயந்திரக் குடுவைகளுடன் நிறுவப்பட்டு அல்லது செம்மையாக்கப்பட்டு ஆயத்த நிலையில் இருக்க வேண்டும். உருளைகளின் முனைகள் அல்லது கிடைமட்ட பாதுகாப்புக் கழிகள் அல்லது முன், பின் இரு பக்கங்களின் குறுக்கே இறுக்கக் கட்டப்பட்ட கம்பி இழைகளுடன் கூடிய நிலையில், யாதொரு முறையில் இயக்குபவர்களை நெருங்குவது இயலாததாகும். அதனை தள்ளும்போது அல்லது இழுக்கும்போது உடனடியாக செயல்பட்டு, மின்சாரத்தை துண்டித்து தடைகளை ஏற்படுத்தும் அல்லது உருளைகளை எதிர்மறையாக இயக்கும்.

(*b*) **பாதுகாப்பு.—**இரப்பர் ஆலையின் இயந்திரத்தின் மீதுள்ள பாதுகாப்புக் கழிகள் அல்லது இறுக்கமான மின்கம்பி வடம் உருளையின் முகப்புப் பகுதி முழுவதும் நீட்டிக்க வேண்டும். தரை மட்டத்திலிருந்து அல்லது பணிபுரியும் நிலையில் இருந்து 170 செ.மீ. உயரத்திற்கு மிகாமல் இது அமைக்கப்பட வேண்டும்.

2(*a*) பளபளப்பாக்கும் இயந்திரங்கள் கிடைமட்ட பாதுகாப்புக்கழிகள் அல்லது முன், பின் இரு பக்கங்களில் இறுக்கமான கம்பி இழைகளுடன் ஆயத்த நிலையில் இருக்க வேண்டும். தரை மட்டத்திற்கு மேல் அல்லது பணிபுரியும் நிலைக்கு மேல் 170 செ.மீ.க்கு மிகாமல் அவை அமைக்கப்பட வேண்டும்.

(*c*) பளபளப்பாக்கும் அனைத்து இயந்திரங்களின் ஒவ்வொரு புறமும், உருளையின் முகப்பின் இரு கடைப்பகுதிகளுக்கு அருகிலும் முனைப்பகுதியில் பாதுகாப்புக் கழி இயக்க முறையுடன், குறுக்குவாட்டில் இறுக்கமான கம்பிவடங்கள் இணைக்கப்பட வேண்டும் என்பதுடன், தரையிலிருந்து 30 செ.மீட்டருக்குள்ளான அளவில் இணைக்க வேண்டும். இந்தக் கம்பிவடங்கள், உருளையின் முகப்பிலிருந்து 30 செ.மீ. மிகாத தொலைவிலும் பளபளப்பாக்கும் இயந்திரத்தின் சட்டத்திலிருந்து 25 மி.மீக்கு குறையாத தொலைவிலும் இருக்க வேண்டும்.

**4. பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள்.—**மேலாளர் அல்லது ஏனைய பொறுப்பு வாய்ந்த நபரின் முன்னிலையில் அனைத்து இரப்பர் இயந்திரங்கள் மற்றும் பளபளப்பாக்கும் இயந்திரங்களில் உள்ள பாதுபாப்புக் கழிகளையும், இறுக்கமான கம்பி வடங்களையும் நாள்தோறும் பரிசோதித்து ஆய்வு செய்ய வேண்டும். அத்தகைய ஆய்வு மற்றும் பரிசோதனையின்போது, அவற்றில் ஏதேனும் குறைபாடு இருப்பது தெரியவருமாயின் அத்தகைய குறைபாட்டினை களையும் வரையில் அந்த இரப்பர் இயந்திரத்தை அல்லது பளபளப்பாக்கும் இயந்திரத்தைப் பயன்படுத்தக் கூடாது. அத்தகைய பரிசோதனை, ஆய்வு குறித்த பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும்.

**5. உட்செலுத்தும் வார்ப்பு இயந்திரம்.—(1)** தக்க பிணைப்பு ஏற்பாடு செய்து பராமரிக்கப்பட்டு வரும் இயந்திரத்தின் முன்பக்க பாதுகாப்பு அடைப்பு முழுமையாக மூடப்பட்டிருந்தாலன்றி, வார்ப்பு இயந்திரங்களை மூட இயலாது. முன்பக்க பாதுகாப்பு அடைப்பு திறந்துள்ளபோது, வார்ப்பு இயந்திரத்தின் இயக்கம் தானாகவே நின்றுவிடும். பாதுகாப்பு அடைப்புமூலமாக வார்ப்பு இயந்திரத்தை அணுக இயலாது.

**(2)** மேற்சொன்னவற்றுடன், முன்பக்க பாதுகாப்பு அடைப்புடன் நீர்மவிசையால் இயக்கப்படுகின்ற பாதுகாப்பு ஏற்பாட்டு முறையையும் அமைக்க வேண்டும். முன்பக்க பாதுகாப்பு அடைப்பை திறக்கும்போது, கடைநிலை இரும்பு வார்ப்புத் தட்டு (tail stock mould plate) முன்பக்கமாக இயங்குவதிலிருந்து தடுக்கும்.

(3) இயந்திரத்தின் பின்பக்கத்தில், திறம்பட்ட பாதுகாப்பு அமைப்பு அல்லது நகரும் தன்மை கொண்ட அமைப்பு நிறுவப்பட்டிருக்க வேண்டும். வார்ப்பு இயந்திரங்கள் இயக்க நிலையில், பின்பகுதியிலிருந்து அபாயப் பகுதியை அடைவதை தடுக்கும் பொருட்டு, மேற்சொன்ன (1)—ன்கீழ் தேவைப்படுகிறவாறு, இதன் முன்பக்க பாதுகாப்பு அடைப்பு முறையில், வார்ப்புத் தட்டுக்களின் இயக்கத்துடன் உரிய பிணைப்பு முறையும் அமைக்கப்பட வேண்டும்.

(4) உட்செலுத்தும் பிரிவு மற்றும் ஏனைய அணுகத்தக்க பாகங்களை போதுமான அளவு மின்கடத்தாப் பொருள்கொண்டு உறையிட்டு பாதுகாக்க வேண்டும். வெப்பமான பாகங்கள் உள்ள பகுதிகளில் எச்சரிக்கைக் குறியீடுகள் வெளியில் தெரியும்படி அவசியம் அமைக்கப்பட வேண்டும்.

**6. பாதுகாப்பு முன் எச்சரிக்கைகள்.—**(1) பணிபுரியும் அறைக்கு வெளியில், மின் உற்பத்தி சாதனங்களிலிருந்து வெளிவரும் வாயுக்கள், புகையை சேகரிப்பதற்கும், நீக்குவதற்கும் தக்க விதித்துறைகள் ஏற்படுத்தப்பட்டு, பின்பற்ற வேண்டும்.

(2) வெப்பமான பரப்புகள் மற்றும் சூடான பிளாஸ்டிக் வாயுக்கள் தொடர்பான பணிகளில் ஈடுபடும்போது, ஏற்படக்கூடிய தீக்காயங்களை தவிர்ப்பதற்காக தொழிலாளர்களுக்கு உரிய தனி பாதுகாப்புக் கருவி வழங்கப்பட வேண்டும்.

(3) இயந்திரம், வார்ப்பு மாற்றுதல், பராரிப்புப் பணி ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள அனைத்து பணியாளர்களின் பாதுகாப்புக்காக, பாதுகாப்பான முறையில் பணிபுரிவது குறித்து எழுதிவைக்கப்பட்டுள்ளவை, மேம்படுத்தப்பட்டு, பின்பற்றப்பட வேண்டும். அத்தகைய அனைத்து தொழிலாளர்களும், பணியில் ஈடுபடுவதற்கு முன்னர், பாதுகாப்பான முறையில் பணியில் ஈடுபடுவது குறித்து, போதுமான அளவு பயிற்சி அளித்து அது குறித்து அறிவுறுத்தப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.